DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 131/2019** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : முருகன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 04.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 04 June 2026.

**எதிரிகள் ஆஜரில்லை . மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். என் சொந்த ஊர் சங்கரன்கோவில் ஆகும். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் முனியான்டி என்ற டேனியல் மற்றும் ஆனந்தராஜ் எனக்கு தெரியும். எதிரி ஆனந்த ராஜ் நான் காங்கிரஸ் கட்சியில் இருந்த போது அவரும்காங்கிரஸ் கட்சியில் இருந்தார். அவரு03.03 க்கும் எனக்கும் பலக்கம் இருந்தது. நான் அப்போது சங்கரன்கோவிலில் நகை வியாபாரம் செய்தேன். எதிரி முனியான்டி அவருக்கு வேண்டியவருக்கு நகை வாங்க என்னிடம் அழைத்து வருவார்.

அப்போது அவர் ஈரோட்டில் உள்ள ராஜேஷ் மற்றும் சந்துரு என்பவர்கள் வங்கியில் இருந்து நகைகளை ஏலம் எடுத்து வைத்துள்ளார். அதை நீங்கள் விலைக்கு வாங்குங்கள் என்று கூறினார். நான் அப்போது, எதிரிகள் முனியான்டி மற்றும் ஆனந்தராஜ்-யிடம் ரு.50,000/- கொடுத்தும் அதன் பின்னார் 5,00,000/- கொடுத்தும், ஒப்பந்தம் செய்து கொண்டேன். கிராம் ரூ.2500/- வாங்கிகொள்ள ஒப்பந்தம்செய்து கொண்டேன். அந்த ஒப்பந்தத்தை என் கையில் தான் வைத்துள்ளேன். பின்னர் 22.06.2014ம் தேதி காலை 7.15 மணிக்கு நானும் எதிரிகள் முனியான்டி காரில் ஈரோட்டிற்கு நகை வாங்குவதற்காக சென்றோம். பணத்தை நான் முடியான்டியிடம் கொடுக்கும் போது என் நண்பர் ரிபாய் என்பவரும், என் மைத்துனர் ஜெயசந்திரன் என்பவரும் வந்தார்கள். மதியம் 2.15 மணிக்கு ஈரோடு போய் சேர்ந்தோம். அங்கு ஒரு Hotel -ல் வைத்து சந்திரு மற்றும் ராஜேஷ் என்பவரை எனக்கு அறிமுகம்செய்தார். அப்போது தங்க பிஸ்கட் எனக்கு காண்பித்தார்கள். அதை கொண்டு ஈரோடு பஸ்டான்டில் உள்ள அபிராமி லாட்ஜில் தங்க சொன்னார்கள். அன்று இரவு 10.30 மணியளவில் அப்போது எதிரி முனியான்டி டீ குடிக்க சென்று வருகிறேன் என்று சொன்னார். டீ குடிக்க சென்ற முனியான்டி வரவில்லை. முனியான்டியை காணவில்லை என்று அபிராமி Hotel வரவேற்பறையில் கேட்டேன். அப்போது இரவு 11.30 இருந்து 12.30 பின்னர் நான் ரூம்யை காலி செய்து விட்டு கீழே வந்தபோது, சந்துரு எனக்கு போன் செய்து வந்த வழியே சென்றுவிடு, புகார் எதுவும்கொடுததால் இந்த ஊரை விட்டு போகமுடியாது என்று எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார். சந்துரு கொலை மிரட்டல் விடுத்தால் எனக்கு பயம் ஏற்பட்டது. பின்னர் அங்கி03.03ருந்து ஒரு வாடகை கார் மூலம் சங்கரன்கோவில் வந்து சேர்ந்தேன். பின்னர் 3 நாள் கழித்து சங்கரன்கோவில் காலல் நிலையம் சென்று முனியான்டி, ஆனந்தராஜ், சந்துரு, மற்றும் ராஜேஷ் என்னை மோசடி செய்தார் என்று அவர் மேல் நடவடிக்கை எடுக்க (வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது).

(Sd/-)M.Mari

Judicial Magistrate,

Sankarankovil.